சி.சி.எண்.– 6/2022

பெயர்– சுலோச்சனா (அ.சா.1)

நாள்– 18.08.2022

<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி</u>

எனக்கும் 1ம் எதிரிக்கும் 26.02.2007ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 23.08.2014ம் தேதிய காலம் வரை நானும் 1ம் எதிரியும் சந்தோசமாக கணவன் மனைவியாக வாழ்ந்தோம் என்றால் சரிதான். 09.08.2015ம் தேதி எனக்கும் 1ம் எதிரிக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நான் எனது சித்தி வீட்டுக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் போகும்போது எனக்கு சீதனமாக கொடுத்த நகைகளை என்னுடன் எடுத்து கொண்டுபோய்விட்டேன் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் எனது நகையை எடுத்துபோகவில்லை எனது கணவர் வீட்டில் தான் உள்ளது என்று சாட்சியம் அளிக்கிறார். அதன்பின்னிட்டு 18.08.2015ம் தேதியில் சாத்தூர் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எனது கணவர் மீது ஒரு புகார் கொடுத்தேன் என்றால் 09.08.2015ம் தேதி புகார் கொடுத்தேன். 19.08.2015ம் தேதி என்னையும் எனது கணவரையும் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் சம்பந்தமாக விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அந்த புகாரில் எனக்கு வரதட்சணையாக 20 பவுன் நகை கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. 25.01.2017ல் சாத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கணவர் மற்றும் அவர் குடும்பத்தினர் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின் மீது நடந்த விசாரணையில் திருமணம் உறவை பற்றிய பிரச்சனையை நீதிமன்றத்தில் பார்த்து கொள்வதாக 1ம் எதிரியும் நானும் எழுதி கொடுத்துள்ளோம் என்றால் எனது கணவர் தான் எழுதி கொடுத்தார். நான் வாழ்வதாக தான் சொல்லி எழுதி கொடுத்தேன். நேரம் சரியில்லை என்று சென்னையில் உள் எனது அண்ணன் வீட்டிற்கு எனது கணவரே டிக்கெட் எடுத்து அனுப்பிவிட்டு இன்றுவரை என்னை தொடர்பு கொள்ளவில்லை. 2015ம் ஆண்டில் இருந்து இன்றுவரை எனது கணவரும் நானும் கருத்துவேறுபாடு காரணமாக பிரிந்து தான் வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். 1ம் எதிரியை தவிர்த்து 2 முதல் 6 எதிரிகள் தனிதனியாக தனி குடித்தனமாக தான் வாழ்கிறார்கள் என்றால் சரிதான் எனது கணவரின் அம்மா எனது கணவரின் அண்ணனுடன் இருக்கிறார். 2 முதல் 6 எதிரிகள் தேவையில்லாமல் தலையிட்டார்களா என்றால் தலையிட்டார்கள். 2 முதல் 6

எதிரிகள் எனது குடும்ப விவாகரத்தில் தலையிடவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 6 எதிரிகள் தனிதனி வீட்டில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். ஒரே லயன் வீட்டில் தனிதனி வீட்டில் குடியிருந்தோம். இதுவரை நான் மகளிர் காவல் நிலையத்தில் ஆறு முறை புகார் கொடுத்திருக்கேன் என்றால் 2, 3 முறை தான் கொடுத்தி்ருக்கிறேன். சி.சி.எண்.23/2018 வழக்கிற்கு முன்பாக நான்கு முறையும் இந்தவழக்கிற்கு முன்பாக இரண்டு முறையும் ஆக ஆறு முறை புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆறு முறையும் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரில் உண்மை தன்மை இல்லை என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மறுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு சிசி 23/2018 மற்றும் சிசி 06/2022 வழக்கு ஆகிய இரண்டு வழக்குகளுமே நான் நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 156 (பி.) படி மனு செய்து பெற்ற உத்தரவின் அடிப்படையில் முதல் தகவல் அறி்கை பதிவு செய்யபட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யபட்ட வழக்குகள் என்றால் சரிதான். நான் கொடுத்த ஆறு புகார்களில் நான்கு புகார்கள் வரதட்சணை கேட்டு கொடுமைபடுத்தியதாக கொடுக்கபடவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 6 எதிரிகள் வரதட்சணை கேட்கவில்லை என்றாலும் நானும் எதிரிகள் வரதட்சணை கேட்டதாக புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது சித்தப்பா விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். அவரது அதிகாரத்தை பயன்படுத்தி தான் அவரது அறிவுறுத்தலின் பேரில் ஒவ்வொரு முறையும் எதிரிகள் மீது அனைத்து மகளர் காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. கடந்த 7 வருடமாக 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழ்வதற்காக நான் எந்தவித சட்டபடியான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 2, 3 முறை எனது மகனை அழைத்து கொண்டுபோனபோது என்னை அடித்து தள்ளிவிட்டார்கள். நான் எந்தவிதமான சட்டபடியான நடவடிக்கை எடுத்தேன் என்றால் எனது மகனுடன் எனது கணவர் வீட்டிற்கு உரிமையுடன் போனேன். எனது கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காக நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது கணவருக்கு 2014 ஆண்டு 1ம் எதிரிக்கு விபத்து ஏற்பட்டு மூளை குழம்பி என்னை சந்தேகபட்டார் என்று சிசி 23/2018 வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன்

என்றால் சரியல்ல. 09.08.2015ம் தேதி எனக்கு பாத்தியப்பட்ட நகைகளையும் 1ம் எதிரிக்கு பாத்தியப்பட்ட நகைகளையும் எடுத்துக்கொண்டு விஸ்வநத்தத்தை சேர்ந்த ஆர்எஸ்ஆர் பஸ் டிரைவர் முத்துபாண்டி என்பவருடன் ஓடி போய்விட்டேன் என்றால் அது சுத்த பொய்யாகும். 19.08.2015ம் தேதி நானும் 1ம் எதிரியும் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆஜர் ஆனோம் என்றால் சரிதான். அந்த விசாரணையில் நான் முத்துபாண்டி என்பவருடன் ஓடி போனது தவறு தான் என்றும் இனிமே அவ்வாறு செய்யமாட்டேன் என்று எழுதி கொடுத்து கையெழுத்து செய்து அதில் என்னுடைய மாமா மற்றும் தம்பி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் வாழ்க்கைக்காக எழுதி கொடுத்தேன். என் மீது தவறை வைத்துக்கொண்டு நான் அடிக்கடி 1 முதல் 6 எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதே விசாரணையில் என் வீட்டில் எனக்கு 70 பவுன் நகையும் 5 லட்சமும் கொடுத்ததாக மிகை படுத்தி கொடுத்துவிட்டேன் என்றும் என் வீட்டில் 20 பவுன் நகை போட்டார்கள் என்றும் ரொக்கம் எதுவும் கொடுக்கவில்லை என்று எழுதி கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 05.09.2017 ல் பதிவு செய்யபட்ட முதல் தகவல் அறிக்கையின் பேரில் கோப்புக்கு எடுக்கபட்ட வழக்கான சிசி 23/2018 வழக்கானது 11.11.2019 ல் 1 முதல் 6 எதிரிகள் விடுதலை செய்யபட்டு தீர்ப்பளிக்கபட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கபடும் ஆவணம் தான் அதற்கான தீர்ப்பு என்றால் சரிதான் அது எ.ம.சா.ஆ 1 ஆகும். வளையபட்டியில் இருந்து வெற்றிலையூரணிக்கு யார் யார் எந்த தேதியில் எத்தனை நேரத்தில் என்ன கிழமையில் சென்றோம் என்றால் நான் எனது மகன், எனது மாமா பாலசுப்பிரமணியன், வேண்டாராஜன், ஆகியோர் காலை 11.00 மணிக்கு 10ம் தேதி திங்கள்கிழமை சென்றோம். 10.06.2019ம் தேதி தான் சென்றோம் என்றால் சரிதான். 09.06.2019ம் தேதி சென்றபோது வீடு பூட்டியிருந்தது என்று எனது புகார் மற்றும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் யார் யார் வீடுகள் பூட்டியிருந்தன என்றால் அந்த காம்பவுண்டே முழுவதும் பூட்டி யாருமே இல்லாமல் இருந்தது. யாரிடமாவது அங்கிருந்தவர்கள் எங்கு சென்றார்கள் என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். விஸ்வநத்தத்தில் உள்ள எனது கணவர் 2வது திருமணம் செய்த மகாலட்சுமி வீட்டிற்கு மதிய சாப்பாட்டிற்காக 1 முதல் 6 எதிரிகள் சென்றுவிட்டதாக சொன்னார்கள்.

எத்தனை நாட்களுக்கு முன்பு போனார்கள் என்று விசாரித்தேனா என்றால் அன்றைக்கு தான் போனார்கள். எத்தனை நாட்கள் கழித்து வருவார்கள் என்று கேட்டேனா என்றால் இல்லை. வீடு பூட்டியிருந்ததை பார்த்து ஏமாற்றம் ஆகிவந்துவிட்டோம். எனது மாமா பாலசுப்பிரமணியன், மற்றும் வேண்டாராஜனுக்கு எந்த ஊர் என்றால் வளையபட்டி ஆகும். அன்றையதினம் எனக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் செய்து வைத்த எனது தாய்மாமா ஆன முத்துசாமி வளையபட்டியில் தான் இருந்தார் என்றால் சரிதான். எனது தாய்மாமா முத்துசாமி சிசி 23/2018 வழக்கில் எனக்கு ஆதரவாக சாட்சியம அளித்துள்ளார் என்றால் சரிதான். எனது அம்மா அப்பாவும் எனது தாய்மாமா முத்துசாமியின் வீட்டில் தான் நிரந்தரமாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது தாய்மாமா முத்துசாமி கோழிபண்ணை வைத்துள்ளார் என்றாலும் அந்த கோழிபண்ணையில் தான் எனது அம்மா அப்பா தனியாக வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். சம்பவதினமான 10.06.2019 அன்று எனதுஅம்மா அப்பா வளையபட்டியில் உள்ள அவர்கள் வீட்டில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். சிசி 23/2018 வழக்கில் எனது அப்பா அம்மாவும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது தம்பி 10.06.2019 ம்தேதி வளையபட்டியில் இருந்தாரா என்றால் இல்லை. எனது தாய்மாமா முத்துசாமி எனது அப்பா அம்மாவை நான் சம்பவ தினத்தன்று வெற்றிலையூரணிக்கு 10.06.2019 தேதியன்று அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். எனது தாய்மாமா முத்துசாமி எனது அப்பா அம்மாவை நான் சம்பவ தினத்தன்று வெற்றிலையூரணிக்கு 10.06.2019 தேதியன்று அழைத்து செல்லாததிற்கு தனிபட்ட காரணம் ஏதாவது உள்ளதா என்றால் எனது மாமா முத்துசாமி சென்னைக்கு ஒரு வேலை விசயமாக சென்றிருந்தார். எனது தாயாருக்கு சக்கரை வியாதி உண்டு எனது அப்பாவுக்கு உடல்நிலை சரயில்லை. எனது நடத்தை சரியில்லாத காரணத்தினால் எனது மாமா முத்துசாமி எனது அப்பா அம்மா சம்பவத்தன்று வெற்றிலையூரணிக்கு வந்து நியாயம் கேட்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள் என்றும் அந்த விபரத்தை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் நான் கொடுத்த புகாரில் நானும் எனது மகனும் 09.06.2019 ம் தேதி வெற்றிலையூரணிக்கு சென்றதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 09.06.2019 ம் தேதியன்று யார் யார் எல்லாம்

வெற்றிலையூரணிக்கு சென்றோம் என்றால் நான் எனது மகன் எனது மாமா பாலசுப்பிரமணியன் மற்றும் வேண்டாராஜா ஆகியோர்கள் போனோம். வெற்றிலையூரணிக்கு சென்று அங்குள்ள நாட்டாண்மை, பஞ்சாயத்து தலைவர், ஊராட்சிமன்றதலைவர் ஆகியோரிடம் 1ம் எதிரி 2 வது திருமணம் செய்து கொண்டாரா என்பது பற்றி விசாரித்தோமா என்றால் யாரும் பொறுப்பாக பதில் சொல்லவில்லை எனவே நேரடியாக வீட்டுக்குபோவோம் என்று போய்விட்டோம். வெற்றிலையூரணியில் எங்கள் சமூகத்திற்கு என்று ஒரு தலைவர் உள்ளார்என்றால் சரிதான். அவரிடம் போய் விபரத்தை சொன்னமோ என்றால் அவரும் பொறுப்பாக பதில் அளிக்கவில்லை. நான் சொல்வது போல் 1ம் எதிரி 2 வது திருமணம் செய்யவில்லை என்றாலும் அவ்வாறு 2 வது திருமணம் செய்யாத காரணத்தினால் தான் எனக்கு யாரும் பொறுப்பாக பதில் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வெற்றிலையூரணியை சேர்ந்த யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. முருகேஸ்வரி, கணபதி ஆகியோர்கள் வெற்றிலையூரணியை சேர்ந்தவர்கள். அவர்கள் சாட்சிகளாக உள்ளார்கள். கணபதி வெற்றிரையூரணியை சேர்ந்தவராக இருந்தாலும் கூட கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பே திருமணமாகி அவரது கணவர் ஊரான விஸ்வநத்தத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 09.06.2019 ம் தேதியன்று வெற்றிலையூரணிக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் காரில் சென்றோம். அந்த கார் எனது மாமா முத்துசாமியின் காராகும். அந்த காரை யார் ஓட்டி வந்தார் என்றால் எனது மாமா பாலசுப்பிரமணியன் ஓட்டி வந்தார். அந்த காரின் பதிவெண் தெரியுமா என்றால் 5555 இருக்கும் நிறைய நாட்கள் ஆகிவிட்டதால் ஞாபகமில்லை. 10.06.2019 ம் தேதி எந்த வாகனத்தில் வெற்றிலையூரணிக்கு சென்றோம் என்றால் அதே காரில் தான் சென்றோம். இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்றால் அ.சா.3 பாலசுப்பிரமணியன் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். 10.06.2019 அன்று என்னிடம் 1ம் எதிரி தான் பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. 1 முதல் 6 எதிரிகளுமே என்னை அசிங்கமாக நீ ஏன் தேவடியா இங்கு வந்தாய் நாங்கள் கேட்ட பணமும், நகையும் கொண்டுவந்தால் தான் வாழவிடுவோம் இல்லை என்றால் கொன்றுவிடுவோம்என்று சொன்னார்களா. நான் கொடுத்த புகாரில் நகையும் பணமும் கொண்டு வந்தால் தான் வாழவிடுவோம் இல்லை என்றால் கொன்றுவிடுவோம் என்று 1 முதல் 6 எதிரிகள்

சொன்னதாக புகாரில் சொல்லியுள்ளனோ என்றால் சொல்லியுள்ளேன். 7 முதல் 9 எதிரிகளை நான் எந்தகாலத்திலும் பார்த்தது கிடையாது என்றால் மகாலட்சுமி நான்போனபோது வீட்டில் இருந்தார். 8, 9 எதிரிகள் வீட்டில் அப்போது இல்லை என்றால் சரிதான். இவர்தான் 7வது எதிரி என்று யார் சொல்லி நான் தெரிந்துகொண்டேன் என்றால் ஒருவர் சொல்லி தெரிந்துகொண்டேன். அந்த ஒருவர் யார் என்றால் சொன்னவர் பெயர் சின்னதம்பி மாமா ஆகும். சின்னதம்பி என்னுடன் வந்து மகாலட்சுமிரயை அடையாளம் காட்டினாரா என்றால் இல்லை. நான் கேட்டபோது மகாலட்சுமியை 1ம் எதிரி திருமணம் செய்து கொண்டதாக சொன்னார். எனது புகாரில் சின்னதம்பி சொல்லிதான் மகாலட்சுமியை தெரிந்துகொண்டேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சின்னதம்பி என்னுடன் வந்து இவர்தான் மகாலட்சுமி என்று அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். 10.09.2019ம் தேதியில் எவ்வளவு நேரம் சம்பவம் நடந்தது என்றால் மூன்று மணிநேரமாவது நடந்திருக்கும். 11 மணியில் இருந்து 1.00 மணி வரை 10.09.2019 அன்று நானும் எதிரிகளும் தொடர்ந்து சண்டை போட்டுக்கொண்டே இருந்தோம்என்றால் சரிதான். வெம்பக்கோட்டை காவல் நிலையம் சம்பவ இடத்தில் இருந்து ஒரு 5கி.மீ தூரத்தில் இருக்கும் என்றால் சரியல்ல. 10 கி.மீ தூரத்தில் இருக்கும். சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் சம்பவ இடத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. 8 கிமீ இருக்குமா என்றால் கூடவே தான் இருக்கும். என்னிடமும் எனது இரண்டு மாமாவிடமும் அன்றைய தினம் செல்போன் இருந்தது என்றால் சரிதான். சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய தொலைபேசி எண் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். மூன்று மணி நேரமாக சண்டை நடந்து கொண்டிருந்தபோது சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு செல்போன் மூலமாக தொடர்பு கொண்டேனா என்றால் இல்லை. ஏனெனில் என்னை அடித்து எதிரிகள் துரத்தி கொண்டிருந்தார்கள். செல்போன் பேசுவதற்கு யாரும் விடவில்லை. என்னுடன் வந்த இரண்டு மாமாக்களையும் எதிரிகள் எந்த விதத்திலும் பேசி அடித்து தொந்தரவு கொடுக்கவில்லை என்றால் அவர்களையும் பேசி அடித்து தொந்தரவு கொடுத்தார்கள். இதுபோன்று சம்பவம் நடந்தால் காவல் துறையினருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என்று எனக்கும் எனது இரண்டு

மாமாவுக்கும் தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தை எவ்வளவு பேர் வேடிக்கை பார்த்திருப்பார்கள் என்றால் 100 பேர்கள் பார்த்திருப்பார்கள். சம்பவம் நடந்த உடன் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் அன்றைய தினம் 2 மணிக்குள் புகார் கொடுத்தேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்கத் தெரியும் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதி கொடுத்தேன். யாரிடம் கொடுத்தேன் என்றால் போலீஸ் ஸ்டேசனில் யாரிடம் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவல் நிலையத்தில் இருந்து எத்தனை மணிக்கு போனோம் என்றால் 4 மணிக்கு எங்கள் வீட்டிற்கு போய்விட்டோம். காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் எதிரிகளை பிடிக்காமல் எதிரிகள் வெளியில் சுற்றி திரிந்ததை வைத்து தெரிந்து கொண்டேன். நான் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபடவில்லை என்றாலும் சி எஸ் ஆர் மனு கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். 10.06.2019 அன்று நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் அதற்கு சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தார்கள். விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. அதன்பின்பு இந்நீதிமன்றத்தில் தான் நேரடியாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் அந்த புகாரை எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 03.07.2019 தேதியில் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரின்பேரில் எந்த தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன்பிறகு என்னை போலீசார் விசாரிக்கவும் இல்லை என்றால் சரிதான். எனது புகாரில் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் எச்எம்ஓபி 195/2017 வழக்கு தாக்கல் செய்து அதில் நான் ஆஜராகி வழக்கு நடத்தி வருகிறேன்என்று சொல்லியள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு நான் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 13.11.2018 ல் 1ம் எதிரிக்கு சாதகமாக ஒருதலைபட்சமாக உத்திரவிடப்பட்டு விவாகரத்து

வழுங்கபட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கபடும் ஆவணம் உத்தரவு, உத்தரவாணை என்றால் சரிதான். அந்த உத்தரவு எ.ம.சா.ஆ 2 ஆகும். அந்த உத்தரவாணை எ.ம.சா.ஆ 3 ஆகும். நான் சொல்வது போல் 03.07.2019 ம் தேதியன்று எனக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது சம்பந்தமாக எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. எனது புகாரில் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் எச்எம்ஓபி 195/2017 வழக்கு நிலுவையில் உள்ளது என்று கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். 1ம் எதிரி 7ம் எதிரியை 2வது திருமணம் செய்துகொண்டதாக எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 மற்றும் 7ம் எதிரிக்கு வீட்டில் வைத்து திருமணம் நடந்துள்ளது. திருமண பத்திரிக்கை தாசில்தார் மற்றும் விஏஓ மூலமாக வாங்கினேன். திருமண பத்திரிக்கை எந்த ஊரில் எங்கு அச்சடிக்கபட்டது என்றால் சிவகாசியில் அடிக்கபட்டது. திருமண பத்திரிக்கை எந்த பிரஸ்சில் அச்சடிக்கபட்டது என்று இருக்கும் என்றால் சரிதான். 1ம் எதிரி 7ம் எதிரியை திருமணம் செய்து கொண்டதற்கான எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. திருமண பத்திரிக்கை தாக்ல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் 1 முதல் 6 எதிரிகள் கீழ்தரமான வார்த்தைகளால் பேசவும் இல்லை கொலை மிரட்டல் செய்யவில்லை 1ம் எதிரி 7ம் எதிரியை 2வது திருமணம் செய்யவும் இல்லை என்னிடம் வரதட்சணை கேட்கவும் இல்லை என்றாலும் என்னை கொடுமைபடுத்தவும் இல்லை என்றாலும் சரியல்ல. 1 முதல் 6 எதிரிகள் எனது மகனையோ எனது இரண்டு மாமாக்களையோ என்னையோ தாக்கி காயம் ஏற்பட்டதா என்றால் எனது மகனையும், இரண்டு மாமாவையும் என்னையும் தாக்கினார்கள். எனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டது. எனது இரண்டு மாமாக்களுக்கும் கையில் காயம் ஏற்பட்டது. எனது மகனுக்கு முட்டி காலில் உரசி காயம் எற்பட்டு ஒரு வாரம் பள்ளிக்கு செல்லவில்லை எங்களுக்கு ஏற்பட்ட காயத்தை எனது முதல் விசாரணையிலும் போலீசாரிடமும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் எனது மகனுக்கும் இரண்டு மாமாவுக்கும் ஏற்பட்ட காயத்திற்கு எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தோம் என்றால் எனது மகனுக்கு சென்னையில் உள்ள அபிசேக் மருத்துவமனையில் சிகிச்சை அளித்தோம். நாங்கள் மூவரும் மருந்து வாங்கி போட்டு கொண்டோம். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் 1

முதல் 6 எதிரிகளை அலைக்கழிக்கவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>7 முதல் 9 எதிரிகள் தரப்பில் கு.வி</u>

7 ம் எதிரி மகாலட்சுமி தற்போது எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் தற்போது எனது கணவருடன் தான் இருக்கிறார். 7 ம் எதிரி மகாலட்சுமி தனது கணவருடன் திருப்பூரில் வசித்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 7 முதல் 9 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2 முதல் 6, 8, 9 எதிரிகள், 1 ம் எதிரிக்கும் 7 ம் எதிரிக்கும் திருமணம் செய்து வைத்தார்கள் என்று சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல.

சி.சி.எண்.– 6/2022

பெயர்– கார்த்திக்ராஜா (அ.சா.2)

நாள்– 18.08.2022

<u>1 முதல் 6 ம் எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி</u>

எனது அம்மா அப்பா எத்தனை காலமாக பிரிந்து வருகிறார்கள் என்றால் நான் 3 ம் வகுப்பு படித்து வருவதில் இருந்தே பிரிந்து வருகிறார்கள். 7, 8, 9 எதிரிகளை நான் எந்த காலத்திலும் பார்த்தது கிடையாது என்றால் சரிதான். 2 முதல் 6 எதிரிகள் தனிதனியாக அவரவர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். குடும்ப பிரச்சனையில் மற்றொருவர் தேவையில்லாமல் தலையிடமாட்டார்கள் என்றால் தலையிடுவார்கள். 09.06.2019 மற்றும் 10.06.2019 தேதிகளில் யார் யார் என்ன வாகனத்தில் வெற்றிலையூரணி கிராமத்திற்கு சென்றோம் என்றால் நான் எனது அம்மா, தாத்தா பாலசுப்பிரமணியன், வேண்டாராஜா ஆகியோர்கள் காரில் சென்றோம். 10.06.2019 ம் தேதியில் எனது அம்மாவின் அம்மா அப்பா மற்றும் எனது அம்மாவின் தாய்மாமா முத்துசாமி ஆகியோர்கள் வளையபட்டியில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் சென்ற கார் யாருக்கு சொந்தமானது என்றால் பாலசுப்பிரமணியன் தாத்தாவுக்கு சொந்தமானது. அந்த கார் முத்துசாமிக்கு சொந்தமானது என்று சொன்னால் தவறானது என்றால் சரிதான். வேண்டாராஜவிற்கு சொந்த ஊர் எது என்றால் தெரியாது. அவர் வளையபட்டியை சேர்ந்தவர் கிடையாது என்றால் சரியல்ல. 10.06.2019 ம் தேதி அன்று எங்களுக்கும் எதிரிகளுக்கும் எவ்வளவு நேரம் சண்டை நடந்திருக்கும் என்றால் ஒரு அரைமணி நேரம் நடந்திருக்கும். அதனை எத்தனை பேர் பார்த்திருப்பார்கள் என்றால் ஒரு 10, 15 பேர்கள் பார்த்திருப்பார்கள். எனது அம்மா, மற்றும் எனது அம்மாவின் இரண்டு மாமாக்களும் 1 ம் எதிரி 7 ம் எதிரியை 2 வது திருமணம் செய்து கொண்டதாக ஊராட்சிமன்றதலைவர், நாட்டாண்மை, ஆகியோரிடம் புகார் சொன்னார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவம் முடிந்தவுடன் நேரடியாக எங்கு சென்றோம் என்றால் வளையபட்டிக்கு சென்றோம். அதன்பிறகு எங்கு போனோம் என்றால் சென்னைக்கு போனோம். என்னை போலீசார் இந்தவழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தான் விசாரித்தார்கள்.

7 முதல் 9 ம் எதிரிகள் தரப்பில் 1 முதல் 6 ம் எதிரிகள் தரப்பில் செய்யபட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுகொள்வதாக தெரிவிக்கப்பட்டது.